## புற்று நோய்க்கு

# லேப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை

கோவை, ஜூன் 15: புற்று நோய்க்கு லேப்ராஸ்கோபி மூலம் கோவை மெடிக்கல் சென்டரில் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை லேப்ராஸ்கோபி மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கணேசன் கூறியதாவது:

உணவுக்குழாய், இரைப்பை, பெருங்குடல், சிறுகுடல், கணையம், கல்லீரல் ஆகிய உறுப்புக்களில் புற்றுநோய் வர ஆரம்பிக்கும்.

இதற்கு உணவு பழக்க வழக்கத்தில் ஏற்பட்ட மாற்றமே காரணம். புகை பிடித்தல், மது அருந்துதல், பாஸ்ட் புட் சாப்பிடுதல், கருகிய உணவை சாப்பிடுவதால் போன்றவற்றால் வயிறு சம்பந்தப்பட்ட புற்றுநோய் பாதிப்பு ஏற்படும்.

சாப்பிடும் போது விழுங்க முடியாமல் தவித்தல், பசியின்மை, உடல் எடை குறைவு, மலம் கழிக்கும் போது ரத்தகசிவு, வயிறு வீக்கம், மஞ்சள் காமாலை ஆகியவை வயிற்றில் ஏற்படும் புற்றுநோய்க்கான அறிகுறியாகும்.

இந்த அறிகுறி தெரிந்தால் உடனே மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.

இதற்கு எண்டாஸ்கோபி மற்றும் ஸ்கேனிங் மூலம் புற்றுநோய் பாதிப்பு உள்ளதா? என கண்டறியப்படுகிறது. புற்றுநோயினை ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் முற்றிலும் குணப்படுத்த முடியும். புற்றுநோய் அறுவை சிகிச்சை இதுவரை ஓபன் சர்ஜரி மூலம் செய்யப்பட்டது.



டாக்டர் கணேசன்

லேப்ராஸ் கோபி சிகிச்சை மூலம் வயிற்றை கிழிக்க தேவையில்லை. வலி இருக்காது. பக்க விளைவு பாதிப்பு வராது. ரத்தம் வீணாகாது. உயிருக்கு ஆபத்து வராது. அறுவை சிகிச்சை அளித்த பிறகு விரைவில் வீடு திரும்பலாம்.

மயக்க மருந்து கொடுத்து தொப்புள் வழியாக துளையிட்டு லேப்ராஸ்கோபி மூலம் புற்றுநோய் பாதித்த இடத்தை முற்றிலும் குணப்படுத்தலாம்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்பட்ட சோதனையில் புற்றுநோய்க்கு லேப்ராஸ்கோபி மூலம் சிகிச்சை அளிப்பது சிறந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மெடிக்கல் சென்டரில் 85 வயதான ஒருவருக்கு உணவுக்குழாய் கேன்சரை லேப்ராஸ்கோபி மூலம் அகற்றி வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இவரை போன்ற மிகவும் வயதானவர்களுக்கு ஓபன் சர்ஜரி செய்வது ஆபத்தை விளைவிக்கலாம்.

வயிற்றில் ஏற்படும் புற்று நோயினை ஆரம்பத்தில் கண்டுபிடிக்க தவறினால் உடல் முழுவதும் பரவும். எனவே ஆரம்பத்திலேயே மருத்துவரை அணுகுவது சிறந்தது. இந்நோய் ஆண், பெண் இரு பாலருக்கும் வரும். 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அதிகளவு பாதிக்க வாய்ப்புள்ளது. பரம்பரையாக யாருக்காவது புற்றுநோய் பாதிப்பு இருந்தால் அவசியம் பரிசோதனை செய்ய வேண்டும். குழந்தைகளுக்கு இந்நோய் வருவதற்கான வாய்ப்பு குறைவு. கோவை மெடிக்கல் சென்டரில் வயறு சம்பந்தப்பட்ட அனைத்து புற்றுநோய் பாதிப்புக்கும் ஒரே இடத்தில் லேப்ராஸ்கோபி மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இவ்வாறு டாக்டர் கணேசன் தெரிவித்தார்.